Registered as a Newspaper

★ துருப்பிடிக்காத இரும்பினுலான அச்சு
★ கல்சியம் கூடிய நீரில் நீண்டகாலம் பாவிப்பதற்கென விசேடமாக இறக்குமதி செய்யப்பட்ட ஜேர்மன் வாட்டசில்
★ பித்தளையினுலானபம்ப்
★ பம்பின் செயற்பாட்டிற்கு ஒரு வருட உத்தரவாதம்
சொலிட் பம்ப்

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ. 1-25

★ தேர்மோஸ்ரற் உடன் கூடிய
CROMPTON GREAVES
★ மோட்டாரிற்கு இணைக்கப்பட்ட
சொலிட் பம்புகளையே வாங்குங்கள்

சுடர்: 2 யாழ்ப்பாண பிரபவ ஞு ஆடி மீ 01 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 21 (17 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 225

★ மாகாணசபை அதிகாரங்கள்

# இல. - இந்திய அதிகாரிகள் இவ்வாரம் கூடி ஆராய்வர்

## கூட்டணியினர் உதவுவர்

கொழும்பு, ஆகஸ்ட் 17

மாகாண சபைக்கு உரிய அதிகாரங்களை நிர்ணயிப்பது சம்பந்தமாக இலங்கை, இந்திய அதிகாரிகள் இவ்வாரம் கூடி ஆராய இருக்கிருர்கள்.

முன்னர் தயாரிக்கப்பட்ட மாகாண சபை நகலில் உள்ள அதிகாரங்களை விடக் கூடுதல் அதிகாரங்களை நிர்ணயிப்பதற்காகவே இலங்கை -இந்திய அதிகாரிகள் கூடுகின்றனர்.

இது விடயத்தில், இலங்கை, இந்திய அதிகாரிகளுக்கு கூட்டணிப் பிரமுகர்களும் ஆலோசனை தெரிவிப்பர்.

இந்திய தூதுக்குழுவில் வெளியுறவு இணைச்செயலாளர் குல்டிப்சகாதேவ், சட்ட வல்லுநர் எஸ். பாலகிருஷ்ணன் ஆகியோர் அங்கம் வகிப்பர்.

இலங்கை அரசுக் குழுவில் ஜனுதிபதியின் செயலாளர் மெனித்திவெல, பீலிக்ஸ் அபயசிங்க, டாக்டர் எச் டபிள்யு. ஜெயவர்த்தனு ஆகியோர் இடம்பெறுவர்.

பேச்சுக்களில் கலந்து கொள்ளும் இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகள் குழு நேற்று கொழும்பு வந்து சேருவதாக இருந்தது.

இப்பேச்சுகளுக்கு உதவுவதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு.எம். சிவசிதம்பரம், உபதலைவர் இரா. சம்பந்தன் ஆகியோர் ஏற்கனவே கொழும்பு வந்துவிட்டனர்.

வெள்ளி கொழும்பு வந்து சேர்ந்த இவர்கள் கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் மற்றும் பிரமுகர்களுடன் பேச்சுக்கள் நடத்தினர். பின்னர் இந்தியத் தூதர் திரு. ஜே என். டிக்ஸிற்றைச்

(4-ம் பக்கம் பார்க்க)

### பொடிபுத்தா விடுதலை

யாழ்ப்பாணம் ஆக. 18

இடைத் தேர்தலில் ஊர்காவற்றுறைத் தொகுதியில் போட்டியிட வந்த நிக்கரவெட்டிய முன்னுள் எம். பி முதியான்சே தென்னக்கோன் (பொடிபுத்தா) நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

45 தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் வந்த இவர் பொதுமக்களால் பிடிக்கப்பட்டார்.

எனினும் மர்மமாகவே வைக்கப்பட்டிருந்த இவர் நேற்று விடுதலை செய்யப்பட்டதாக இந்திய உயர் ஸ்தானிகராலயம் அறிவித்தது. (இ–10

### ஒப்பந்தத்துக்கு பொடிபுத்தா வரவேற்பு

யாழ்ப்பாணம், ஆக 17

இந்திய — இலங்கை ஒப்பந்தத்தை வரவேற்பதாக நிக்கரவெட்டியாத் தொகுதியின் முன்னுள் எம்.பிமுதியான்ஸே தென்னக்கூன் தெரிவித்தார்.

விடுதலையான பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழ் இளைஞரின் பிரச்சினைகளுக்கு இந்த ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதன் மூலம் தீர்வு காண முடியும் என்று திரு. தென்னக்கூன் சொன்னார். (இ-எ)

ஏனைய தமிழ் அமைப்புகளுடன்

## மோதலைத் தவிர்க்கவே கூட்டணி விரும்புகிறது

### கொழும்பில் சிவா பேட்டி

கொழும்பு, ஆக. 17

ஏனைய தமிழர் அமைப்புக்களுடன் மோதலைத் தவிர்த்து, ஒரு குடை அமைப்பின் கீழ் சேர்ந்து பணிபுரியவே தமிழர் விடுதலை கூட்டணி விரும்புகின்றது.

இப்படி தமிழர் விடுதலை கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் தெரிவித்தார்.

கொழும்பு வந்து சேர்ந்ததும் கொழும்புச் செய்தியாளர்கள் திரு. சிவசிதம்பரத்தைப் பேட்டி கண்டனர்.

கேள்வி: கூட்டணி மீண்டும் அரசியலில் ஈடுபடுமா? தேர்தலில் போட்டியிடுமா?

சிவா: நிலைமையை அவதானிப்போம். எந்த அமைப்புடனும் மோதல் ஏற்படாமல பார்த்துக் கொள்வதே எமது பிரதான விருப்பமாகும்.

தேர்தல் பற்றி நாம் கவலைப்படவில்லை சட்ட மூலம் பழறியே எமக்கு அக்கறை.

கேள்வி: எப்போது யாழ் செல்வீர்கள்?

சிவா: அது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. இலங்கையில் சில தினங்கள் தங்கி இருப்போம்.

கேள்வி: செயலதிபர் அ. அமிர்தலிங்கம் கொழும்பு வருவாரா?

சிவா: அவர் சென்னையில் 'பிஸி'யாக இருக்கின்ருர். உடனடியாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தெற்கில் 2,500 பேர் கைதாகினர்

கொழும்பு, ஆக. 17

அண்மையில் தென் இலங்கையில் இடம் பெற்ற வன்செயல்கள் தொடர்பாக சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு பேர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகவலை கொழும்பு பொலீஸ் தலைமையக சிரேஷ்ட அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.

பொதுமக்கள் கொடுத்த தகவல்களைத் தொடர்ந்தே, இவர்களில் பெரும்பாலோர் கைது செய்யப்பட்டனர் என்றும் அந்த அதிகாரி சொன்னுர். (இ-எ)

# இந்திய இராணுவம் எப்போது வாபஸாகும்?

## ராஜீவ் விளக்கம்

புதுடில்லி, ஆக. 17

சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கை உணர்வு தோன்றிய பின்னர் அரசு, பிரசைகள், ஜனுதிபதி ஜெயவர்த்தனு ஆகியவர்கள் கோரினுல் இந்திய இராணுவம் இலங்கையில் இருந்து விலக்கிக்கொள்ளப் படும்.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று இரவு தெரிவித்தார். பி. பி. சி. வானெலி ஒழுங்கு செய்த "இந்தியா அழைக்கின்றது" என்ற பேட்டி நிகழ்ச்சியில் உலகின் பல பாகங்களில் இருந்து நேயர்கள் தொலைபேசிமூலம் கேட்ட கேள்விகளுக்குப் பிரதமர் ராஜீவ் காந்தி உடனுக்குடன் பதிலளித்தார்

இந்த நிகழ்ச்சி செய்மதிமூலம் நடத்தப்பட்டது.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் பற்றி இரண்டு கேள்விகள் பிரதமரிடம் கேட்கப்பட்டன.

சிங்கப்பூரில் இருந்து இலங்கைத் தமிழ் பெண் செல்வி ரங்கராஜ் முதலாவது கேள்வயைக் கேட்டார்.

கேள்வி: இலங்கைத் தமிழர் என்ற முறையில் இலங்கையில் சமாதானம் நிலவ நடவடிக்கை எடுத்ததற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

ஒப்பந்தம் அமுல்நடத்தப்படுவதில் முன்னேற்றம் காணப்படுகின்றதா?

பிரதமர் காந்தி: ஒப்பந்தம் அமுல்நடத்தப்படுவதில் நியாயமான அளவு முன்னேற்றம்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

17-8 1987

திங்கட்கிழமை

சுபநேரம்:-
12.05 முதல் 1 35 வரை
ராகுகாலம்:-
7.35 முதல் 9.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

அட்டமி காலை 7-00 மணி வரை
அதன் மேல் நவமி

## ஒப்பந்தத் திணிப்புக்கு ஒற்றுமை இன்மையே காரணம்

### ஈரோஸ் சங்கா கூறுகிறர்

யாழ்ப்பாணம், ஆக. 17

1985 ஆம் ஆண்டு திம்பு மாநாட்டின்போது தமிழர் குழுக்களின் இடையே இருந்த ஒற்றுமை காரணமாகவே இலங்கை-இந்திய அரசாங்கங்களால் அப்போது மாகாணசபைத் திட்டத்தை திணிக்க முடியாமல் போனது. தற்போது இலங்கை-இந்திய ஒப்பந்தம் எமது சம்மதம் இன்றியே கைச்சாத்தானதுக்கான காரணம் எம்மிடையே இருந்த ஒற்றுமையின்மையே.

நேற்றுக்காலை ஈரோஸினுல் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் ஈரோஸின் நிறைவேற்றிக் குழு உறுப்பினரும் பேச்சாளருமான திரு. சங்கர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டில் ஈரோஸின் முக்கியஸ்தர்களான நேசன், பரா, ராஜா ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

ஈரோஸின் போராட்ட வழிமுறை பற்றிக் குறிப்பிட்ட நேசன், 1975ஆம் ஆண்டு தமிழரின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஈரோஸ் இயக்கம் தனது அரசியல் போராட்டத்துக்குஅனுசரணையாகவே ஆயுதப்போராட்டத்தை நடத்தியது.

ஆயுதத்தை மட்டும் நம்பி போராட்டத்தை அரம்பிக்கவில்லை. எனவே ஆயுத ஒப்படைப்பு எவ்வகையிலும் அரசியல் போராட்டத்தை பாதிக்கப் போவதில்லை எமது அரசியல் போராட்டம் தொடரும் 'என்ருர்'

வன் செயல்களினுல் போராட்டம் தடைசெய்யப்படமாட்டாது என்றுநம்பியே எங்களின் ஆயுதங்கள் யாவும் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

மீண்டும் வன்செயல் தொடரும் பட்சத்தில் புதிய வழிகளில் ஆயுதங்களைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினுர்.

பழிவாங்கும் நடவடிக்கைக்காக என்றும் தங்களால் ஆயுதங்கள் பாவிக்கப்படவில்லை என்றும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துக்கே பாவிக்கப்பட்டதாகவும் நேசன் மேலும் தெரிவித்தார்.

1983 ஆம் ஆண்டு முதல் எமது மக்கள்

(4-ம் பக்கம் பார்க்க)




முச்சந்தி முரளி

'சுரண்டல்' சுவீப் பிறகும் இஞ்சை வருகுதாம் எண்டு கேள்வி. உந்தச் சுரண்டல் வேறு திக்குகளிலும் பரவினுலும் ஆச்சரியப்பட இல்லை...!

### அடகு நகை: மக்கள் வங்கி ஒப்படைக்கும்

அடகு வைக்கப்பட்ட நகைகளைத் திருப்பிக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை

(4-ம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரம் மதவாச்சியிலும் இந்திய அமைதிப்படை

வவுனியா, ஆக. 17

வவுனியா மாவட்டத்தில் மட்டுமல்லாமல், மதவாச்சி, அனுராதபுரம் ஆகிய பகுதிகளிலும் இந்திய அமைதிப்படையினர் காவல் கடமைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

அனுராதபுரத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பகுதியில் நிலைகொண்டுள்ள இவர்கள் அனுராதபுரம்-பொலன்னறுவ சந்தியில் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதேபோல மதவாச்சியில் பொலீஸ் தடைமுகாம் அமைந்திருந்த வவுனியா வீதியில் கெப்பிட்டிகொல்லாவ சந்தியிலும் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள்.

வவுனியா மாவட்டத்தில் காமினி மகா வித்தியாலயம், பூந்தோட்டம் வயல்வெளி வவுனியா-யாழ் வீதியிலுள்ள அரசினர் பண்ணைப் பகுதி, வவுனியா-மன்னுர் வீதியில் மருக்காரம்பலை, செட்டிகுளம், மாங்குளம் ஆகிய இடங்களில் நிலைகொண்டுள்ளார்கள்.

இவர்கள் கடை வீதியிலும், கிராமப் புறங்களிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ருர்கள். (அ–164)

### வவுனியாவில் விபத்து

வவுனியா, ஆக. 17

வெள்ளியன்று வவுனியாவில் இருந்து மாமடுவ நோக்கிச் சென்ற இலங்கை இராணுவத்தினரின் வாகனம் ஒன்று விபத்தில் சிக்கியதால் நால்வர் காயமடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் படுகாயம்அடைந்த இரண்டு இராணுவ வீரர்களும் வவுனியா ஆஸ்பத்திரியில்அனுமதிக்கப் பட்டு, பின்னர் அனுராதபுரத்திற்கு கொண்டு செல்லப் பட்டார்கள். மற்றைய இரண்டு பொதுமக்களும் வவுனியாவில் சிகிச்சை பெற்று வருகின்ருர்கள்.

வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் நடைபெற்றது. (அ. 164)

## சிறையில் மாற்றுடை தரப்படவில்லை

### சாரம் ஒன்றையே நாம் மாறி, மாறி அணிந்து குளிப்போம்

### விடுதலையான பெண் தகவல்

வடமராட்சி, ஆக 17

காலிச்சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த தமிழ்ப் பெண் கைதிகளுக்கு மாற்றுடை எதுவும் கொடுக்கப்படவில்லை. கைதான பெண் ஒருவரிடம் இருந்தசாரதத்தையே மாறி மாறி அணிந்து எல்லோரும் குளித்தனர்

கடந்த 13ஆம் திகதி காலிச் சிறைச்சாலையில் இருந்து விடுதலையான ஆறு பெண்களில் ஒருவரான ஞானசிகாமணி கெங்காதேவிமேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

29ஆம் திகதி சமரபாகு வீரபத்திரர் ஆலயத்தில் கைது செய்யப்பட்டது முதல் எம்மை விடுதலை செய்யும் வரை இராணுவத்தினர் மரியாதையாகவே நடத்திஞர்கள்

ஆனல் காங்கேசன் துறையிலும், பூஸா, காலி சிறைகளிலும் பெண் இராணுவத்தினரும் பெண் பொலீஸாரும் எம்மைத் தாக்கினுர்கள்

எங்கள் ஒருவருக்கு மாற்றுடை தரப்படவில்லை

எம்முடன் கைதான ஒரு பெண் தனது கவுணுக்கு மேல் சாரம் அணிந்து வந்திருந்ததால் அதைபயன்படுத்தி எல்லோரும் குளிக்க முடிந்தது.

எம்முடன் கைது செய்யப்பட்டவர்களில் 60 வயதுப் பெண்களும் இருந்தனர். அவர்கள் பின்பு விடுவிக்கப்பட்டனர்.

வடமராட்சியில் கைதாகி விடுதலையான எம்மைத் தவிர மேலும் 11 பெண்கள் காலிச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

இவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை வவுனியா, ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள். காலியில் இருந்து கப்பலில் வரும் வழியில் எனது அண்ணுவையும் அதே கப்பலில் கண்டேன்.

அப்பொழுது தான் அண்ணுவும் கைதானது எனக்குத் தெரிய வந்தது.

இப்படி அவர் கூறினுர். (இ-160)

### மீண்டும் சுரண்டல்சுவீப்

யாழ்ப்பானம், ஆக.17

யாழ்ப்பாணத்தில் மீண்டும் 'செவன' சுரண்டல் ரிக்கற்றுகள் விற்பனைக்கு வந்துள்ளன.

தமிழீழ இராணுவத்தினுல் தடைசெய்யப்பட்ட ஸ்ரீலங்கா அதிஷ்டலாபச் சீட்டுகள் அமைதி திரும்பியதையடுத்து மீண்டும் விற்பனைக்குவந்துள்ளன. (உ-10)

### மீசாலையில் ஊர்வலம்

யாழ்ப்பாணம். ஆக. 17

மீசாலை வடக்கைச் சேர்ந்த ராமாவில் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் இந்திய இராணுவ முகாமை அகற்றக் கோரிப் பெரும் எண்ணிக்கையான மக்கள் நேற்று ஊர்வலம் நடத்தினர் என்று அறிய வந்தது.

கொடிகாமம், மீசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்ட பிரஸ்தாப ஊர்வலத்தின் முடிவில் முகாம் பொறுப்பதிகாரியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

வசாவிளான், பொன்ஞலை ஆகிய இடங்களில் உள்ள முகாம்களை அகற்றக் கோரியும் சமூக நல இயக்கப் பிரதிநிதிகள் முகாம் பொறுப்பதிகாரியிடம் மகஜர் கையளித்தனர் என்றும் தெரிய வந்தது. (அ)

இளைய தலைமுறையின் இதயம் வெல்லும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ் சிறு ★
★ விளம்பரம் ★

**விற்பனைக்கு**

Learner's English:- லேனேர்ஸ் இங்கிலீஸ் தமிழ்மொழி மூலம் ஆங்கிலம் பயிலவோருக்கு அரிய அரிய நூல் விலை ரூபா 16/- வரதர் வெளியீடு விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம்.

**தவறி விட்டது**

பாடசாலைப் பெண் அதிபர் ஒருவர் 12 8 87 புதன்கிழமை காலை 782 றூட் மினிபஸ்ஸில் சங்கானையிலிருந்து யாழ்ப்பாணம் பிரயாணம் செய்த பொழுது முக்கிய வங்கிப் பத்திரங்கள் தவறிவிட்டன அவற்றில் அவரின் பெயர், விலாசம் முதலிய விபரம் உண்டு தயவு செய்து அவற்றைக் கண்டெடுத்தவர் அதனை அந்த அதிபரிடம் ஒப்படைத்து தகுந்த சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும் (1493)

**அறிவித்தல்**

'திருஞானஸ்'வருமான வரி ஆலோசகர் யாழ் மத்திய பஸ் நிலையத்திற்கு வடக்கே எமது நிரந்தர சட்டிடமான திருஞானஸ் கட்டிடத்தில் மீண்டும் 19.08.87 முதல் இயங்கும். கலாநிதி பெ. திருஞானசம்பந்தர் Mcom, Ph b AcIS, ACA, FBIM, FCMA, FCCA (London) (1493)

# திருமலை ஏகும் அகதிகளுக்கு
## பணமும் பொருளும்

யாழ்ப்பாணம், ஆக. 17

யாழ் நகரில் தங்கியிருந்து திருகோணமலை மாவட்டத்துக்கு மீண்டும் குடியமரச் செல்லும் திருமலை மாவட்ட அகதிகளுக்கு 1500 ரூபா பணமும் இரண்டு மாதத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களும் இலவசமாக வழங்கப்படும்.

இவற்றைப் பெறுவதற்கு இவர்கள் யாழ்ப்பாண செயலக புனர்வாழ்வுப் பகுதியில் இருந்து கடிதம் ஒன்றைப் பெற்றுச் செல்லவேண்டும்.

இவர்கள் திருமலை திரும்புவதற்கான பிரயாணச் செலவுகளுக்கும் ஒழுங்குகள் செய்யப்படும்.

திருமலையில் மீளக்குடியமர விரும்புவோர் தாம் யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் பிரிவின் உதவி அரச அதிபரிடம் கடிதம் பெற்று —

யாழ் செயலக சமூக சேவைப்பகுதி புனர்வாழ்வுப் பிரிவுடன் தொடர்பு கொண்டால் அவர்கள் வேண்டிய உதவிகளை வழங்குவார்கள்.

இவ்வாறு புனர்வாழ்வு இணைப்பதிகாரி கே. இராஜநாயகம் உதயனுக்குத் தெரிவித்தார் (இ-7)

# எந்நேரமும் ஆபத்தை எதிர்நோக்கும் மகசின் கைதிகள் பற்றி தமிழ் மக்கள் சிந்திப்பதில்லை
## இது வேதனை தருகிறது என்கிறார் சிங்கராயர்

குருநகர், ஆக 16

கடந்த 12 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு உயர் நீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட வண-பிதா, ஆபரணம் சிங்கராயர் யாழ் வந்துசேர்ந்தார்.

தமக்கு எதிரான வழக்கு விசாரணை முடிவடைய ஒரு மணித்தியாலமே இருக்கும் சமயத்தில் வழக்கை அரசு வாபஸ் பெற்றுக் கொண்டதாக அவர் கூறினார்.

இந்திய இராணுவம் இங்கே வந்துள்ளது. இளைஞர்கள் ஏந்திய ஆயுதங்களை கீழே போட்டுள்ளனர் இந்த நிலைமையைப் பார்த்தால் தனக்கு ஒருவகை மயக்கமாக இருப்பதாகக் கூறிய வண-பிதா சிங்கராயர் இவ்வேளை எதனையும் தெரிவிக்காமல் மௌனமாக இருப்பதையே தான் விரும்புவதாகவும் சொன்னார்.

மக்களின் விருப்பத்தை முதலில் அறிந்துகொள்ள விரும்புகிறேன் அவர்களின் விருப்பத்தைப் பொறுத்தே எனது செயற்பாடடைத்தொடங்க உள்ளேன் என்றார்—

எந்த நேரமும் ஆபத்தை எதிர்நோக்கி இருக்கும் மகசின் கைதிகளைப் பற்றி மறக்கப்பட்டவர்களாக தமிழ் மக்கள் செயல்படுவதை குறித்து வேதனை தெரிவித்தார்.

சிறை வாழ்க்கையின் போது அனுபவித்த சித்திரவதைகளால் மாரபு நோய், நரம்புத் தளர்ச்சி கண் பார்வை மங்கல் போன்ற நோய்களுக்கு தாம் இலக்காகி இருப்பதாக அவர் கூறினார்.

சிறை இருந்த காலங்களில் தன்னால் எழுதப்பட்ட ஐம்பதிற்கும் மேற்பட்ட சமய, அரசியல், நிகழ்கால, வரலாறு கட்டுரைகளின் பிரதிகள் கொளுத்தப்பட்டும், சிதைக்கப்பட்டும் போக ஒன்றும் இல்லாத வெறும் அகதியாகவே இங்கு வந்து சேர்ந்துள்ளதாக அவர் சொன்னார். (உ-51)

LANKA CEMENT LTD.

எமது பாவனையாளர்!
வாடிக்கையாளர்களுக்கு!!

ஓர் நற்செய்தி

மீண்டும்
"லங்கா சீமெண்ட்"
விற்பனைக்கு வந்து விட்டது

NEW GENERATIONS USE
LANKA CEMENT
FOR STRENGTH & DURABILITY
WE SAY IT
OUR CUSTOMERS CONFIRM IT

புதிய தலைமுறை நீண்ட நாள் பாவனைக்கும் உறுதிக்கும் இன்று பாவிப்பது
லங்கா சிமெண்ட்
நாம் சொல்லுகிறோம்
பாவனையாளர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்

Head Office:-
M/s LANKA CEMENT LTD.
7th Floor,
130, W. A. D. Ramanayake Mawatha,
Colombo - 2.
Phone— 54754', 547746 & 541358

Factory:-
M/s LANKA CEMENT LTD.
Keerimalai Road,
Kankesanthurai.
Phone—22605, 22810

# செய்திக்கொத்து

### கலாநிதிப் பட்டம்

உள்நாட்டமைச்சர் கே. டபிள்யூ தேவநாயகத்துக்கு மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கத் தீர்மானித்து உள்ளது.

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா இம்மாதம் 22ஆம் திகதி நடைபெற இருந்தது. அது தற்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

பட்டமளிப்பு விழாவின்போது டாக்டர் பட்டம் அமைச்சருக்கு வழங்கப்படும்.

டாக்டர் பட்டம் பெறப்போகும் ஏனையோரின் பெயர்கள் வருமாறு டாக்டர் ஸ்டான்லி ஜே, டாக்டர் சுல்தான் பாவா, டாக்டர் டி ஆர். எம் வால்டன். (உ-எ)

### அஞ்சலி செலுத்தினர்

யாழ்ப்பாணம் ஆக 17

யாழ் ஆஸ்பத்திரியில் மரணமான மூன்றாவது இந்திய இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் பங்கஜ் விக்ரத்தின் பூதவுடலுக்கு இந்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை இச்சம்பவத்தில் காயமடைந்த நான்காவது இராணுவ சிப்பாயான தயளன் யாழ் ஆஸ்பத்திரியில் இருந்து சிகிச்சைக்காக இந்தியா கொண்டுசெல்லப்பட்டுள்ளார் (உ-10)

### கால் இழப்பு

யாழ்ப்பாணம், ஆக. 17

கடுவன் வீமன் காமம் பகுதிகளில் மேலும் இருவர் பொறிவெடிகளில் சிக்கிக் காலை இழந்தனர்.

கடந்த முதலாம்திகதியில் இருந்து இதுவரை 20க்கும் அதிகமானவர்கள் கால் இழந்துள்ளனர்.

எஸ் குணரத்தினம் (வயது45) தெல்லிப்பளை. ஏ. ஏகாம்பரம் (வயது 34) அளவெட்டி ஆகியோரே தற்போது கால் இழந்த இருவரும் ஆவர், (இ-10)

### சேத விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக 17

யாழ் குடாநாட்டில் உள்ள அரச கூட்டுத்தாபன கட்டடங்களுக்கு ஏற்பட்ட சேதவிவரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

உள்ளூராட்சி வீடமைப்பு அமைச்சின் செயலாளர் திரு ஆர். பாஸ்கரலிங்கம் இது சம்பந்தமான விவரங்களை அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு யாழ் அரச அதிபரை கேட்டுள்ளார்.

அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்களுக்கு ஏற்கனவே இதற்கான சுற்றுநிருபத்தை யாழ் அரச அதிபர் அனுப்பியுள்ளார். (இ-ஒ)

### ஆறுதல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஆக 17

சண்ணிவெடிக்கு இலக்காகி கால்களை இழந்த யாழ் செயலக அதிகாரிகளுக்கு இலங்கை இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் மலர்ச்செண்டு கொடுத்து ஆறுதல் தெரிவித்தனர்.

# பூஸா கைதிகள் நோயினால் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 17

பூஸா முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டு வீடுகளுக்குத் திரும்பிய இளைஞர்களில் பலர் நோயுற்றுக் காணப்பட்டனர்.

இவர்களில் வடமராட்சியைச் சேர்ந்த இருவரின் நிலை மிகமோசமானதாக இருந்தது.

பொக்கிளிப்பான் நோயினால் பாதிக்கப்பட்ட இந்த இருவரும் தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் தேவராசா மதிமுகராசா (வயது 19) என்னும் இளைஞர் ஒவ்றரை மாதத்திற்கு முன்னர் பூஸாவில் பொக்கிளிப்பான் நோயினால் பாதிக்கப்பட்டார்.

எந்தவித சிகிச்சையும் அளிக்கப்படாததால் இரண்டாவது தடவையாக இந்நோய்க்கு இலக்காகி கடும் சுகவீனமுற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது (உ-160 10)

# விடுதலையான யுவதிகள்

யாழ்ப்பாணம், ஆக. 17

பூஸா முகாமிலிருந்து விடுதலையாகி வீடுகளுக்குத் திரும்பிய ஆறு யுவதிகளின் பெயர் விவரம்:-

1. கார்த்திகேசு—சாந்தி (வயது 22) குடத்தனை, பருத்தித்துறை.
2. சுப்பிரமணியம்—ஸ்ரீஸ்கந்தராணி (வயது 19)– அல்வாய் வடக்கு
3. சின்னராசா–வினோதினி (வயது17)–புலோலி கிழக்கு
4. [illegible] குமாரி (வயது 27) பருத்தித்துறை.
5. ஞானசிகாமணி—கங்காதேவி (வயது 20) நெடியகாடு, வல்வெட்டித்துறை.
6. சிவலிங்கம் சபீத்தா (வயது 19) — புலோலி கிழக்கு. (உ-10-160)

### சுட்டுக் கொலை!

திருகோணமலை, ஆக.17

ஊர்காவல் படையைச் சேர்ந்த யூசுப் இசாக்—குட்டி என்பவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் [illegible]ப்பட்டார்.

# இப்படிக் கேட்டால் எப்படி அன்பு நீடிக்கும்?
## இந்தியச் சிப்பாய் வேதனை

குருநகர், ஆக. 17

யாழ் பிரதான வீதி, மாநகரசபை அலுவலக சந்தியில் கடமையில் நிற்கும் இந்திய இராணுவ வீரர்களைத் தினமும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள், கல்லூரி மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள் சந்தித்து உரையாடிவருகின்றனர்.

தினமும் இச்சந்தியில் காணப்படும் பாலசுப்பிரமணியம் கல்யாணசுந்தரம் என்னும் இந்திய அமைதிப்படையைச் சேர்ந்த சிப்பாய் எல்லோருடனும் சகஜமாகக் கேட்கின்ற கேள்விகளுக்கு அன்புடன் விடையளித்துக் கொண்டு நிற்பதைக் காணலாம்

இவ்விதம் அன்புடன் கைகளில் எவ்வித ஆயுதங்களும் இல்லாமல் நிற்கின்ற சிப்பாய்களுக்கு வேதனை ஏற்படக்கூடியதாக ஒரு சிலர் நடந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போதையுடன் வருபவர்கள் நீங்கள் ஆயுதங்கள் எதுவுமின்றி நிற்கிறீர்கள் நாங்கள் உங்களைத் தாக்கினால் என்ன செய்வீர்கள்? எனக் கேட்டதாக அந்தச் சிப்பாய் சொன்னார்.

கல்லூரி மாணவர்கள் வந்து ''197 –ல் இந்திய இராணுவம் பர்மா, பங்களாதேஷ் பகுதிகளில் வீடுகளில் நுழைந்து பெண்களை மானபங்கப்படுத்தி வீதிகளில் பொது மக்களைத் துன்புறுத்தியதாகவும் தெரியவருகிறது இங்கும் அந்தமாதிரி இந்திய இராணுவம் ஈடுபடுமா? எனத் தம்மிடம் கேட்டதாகவும் அந்தச் சிப்பாய் கூறினார்.

''இந்திய இராணுவம் அப்படி நடந்திருந்தால் பர்மா, பங்களாதேஷ் அகதிகள் பெருமளவில் இந்தியாவுக்கு அகதிகளாக வந்திருப்பார்களா? என அவர்களிடம் தான் திருப்பிக் கேட்டதாகவும் அந்தச் சிப்பாய் வேதனையுடன் தெரிவித்தார்.

''இவ்விதம் பொது மக்கள் தங்களைப் பற்றி அபிப்பிராயம் வளர்த்துக் கொண்டால் இரு சாராருக்கும் இடையேயுள்ள அன்பு நிலைக்காது'' என்றும் அவர் வேதனையுடன் குறிப்பிட்டார். (உ-51)

# நேர்தலா? நியமனமா?

கொழும்பு, ஆக 17

தங்காலை எம் பியை தேர்தல்மூலம் தெரிவு செய்ய அனுமதிப்பதா? அல்லது நியமிப்பதா?

இதுபற்றி ஐக்கிய தேசியக் கட்சி அடுத்தவாரம் தீர்மானிக்கும்.

ஐ தே. க தலைவர் ஹர்ஷா அபயவர்த்தன இத்தகவலைத் தெரிவித்தார்.

எம் பி.யாக இருந்த ஜினதாஸ வீரசிங்க சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே தங்காலை எம். பி. பதவி காலியானது தெரிந்ததே. (உ-எ)

★ திருமலையில்

# சீனக்குடா, டொக்யாட் தளங்களில் இந்திய வீரர்

திருகோணமலை, ஆக 17

திருகோணமலையில் இந்திய இராணுவத்தினர் சீனக்குடா விமானப் படைத்தளம், டொக்யாட் கடற்படைத் தளம் ஆகியவற்றில் தங்கியிருக்கின்றனர்.

இந்தியக் கடற்படையின் எட்டு யுத்தக் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நிற்கின்றன

இந்தியக் கப்பல்களைப் பார்வையிட தமிழ் மக்கள் உள்துறைமுக வீதியை முற்றுகையிட்ட வண்ணம் உள்ளனர்.

தமிழர் மத்தியில் ஒருவித குதூகலத்தையும் நிம்மதியையும் காணக் கூடியதாக உள்ளது.

இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகள் இல்லை. சோதனைகள் இடம்பெறுவதில்லை. இராணுவத்தின் நடமாட்டமும் நகரில் இல்லை.

தடை முகாம்களில் சோதனைகள் எதுவும் இடம் பெறவில்லை.

இடம் பெயர்ந்த மக்கள் மீண்டும் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றனர்.

திருகோணமலை, கொழும்பு வீதியில் எதுவித தடைமுகாமும் இல்லை அனுராதபுர வீதியில் இருக்கும் இராணுவமுகாமில் எதுவித சோதனைகளும் இப்போது இடம் பெறுவதில்லை.

திருகோணமலை நிலாவெளி வீதியில் எதுவித தடை முகாம்களும் இல்லை (இ-150)

### செய்தியாளர் வந்தனர்

யாழ்ப்பாணம், ஆக. 17

ஈரோஸ் இயக்கத்தின் ஆயுத ஒப்படைப்பைப் பார்வையிடுவதற்கென தமிழ்நாட்டில் இருந்து 40 பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் பகுதிகளுக்கு அழைத்துவரப்பட்டனர். (உ-10)

உ
சிவமயம்

திருமண அழைப்பிதழ்

நிகழும் பிரபவ வருஷம் ஆவணித் திங்கள் 3 ஆம் நாள் (19-8-1987) புதன்கிழமை முற்பகல் 10-02 தொடக்கம் 11-54 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில்,

| எனது திருநிறை செல்வன் | எனது திருநிறை செல்வி |
|---|---|
| ச. இராசேந்திரன் (சந்திரன்) | சு. விமலேஸ்வரி (உருத்திரா) |

ஆகியோருக்கு இறைவன் திருவருளால் திருமணஞ் செய்து வைக்க நிச்சயிக்கப்பட்டுள்ளது,

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் சமுகமளித்து மணமக்களை ஆசிர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி அ. சரவணமுத்து — 9/1, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்
திரு.பொ.சுப்பிரமணியம் தம்பதிகள் — இந்திரப் பிதிஷ்டம், சுன்னாகம்.
(1481)

★ OPEN VISA ★
★ BEIRUT (லிபியா)
(CLEANERS)
★ 3 வெற்றிடங்கள் மட்டுமே உண்டு.
★ சாப்பாடு, இருப்பிட வசதிகளுடன் அடிப்படைச் சம்பளம் ரூபா 3500/-
★ உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
★ T. இந்திரநாதன் ★
M. THREE TRAVELS
96, Kachcheri Nallur Road,
Nallur, Jaffna.
(முத்திரைச் சந்திக்கு அருகாமையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உணரும் உள்ளமும், சம நோக்கும், தூய அன்பும் மெய்யறிவும், எமக்குத் தந்தருள்க.

— சுவாமி சிவானந்தர்


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22078

17.8.1987 உ. பெ. இல: - 23


# அரசியல் மயப்படுத்தும் போராட்டம் தேவை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தொடர்ந்து, ஈரோஸ் இயக்கமும் தன் வசம் இருந்த ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கொடுமைகளில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக, கடைசிவரை போராடிய இயக்கங்களில் ஈரோஸூம் ஒன்றாகும். இந்த பண்ணிலேயே இருந்து, மக்களைப் பாதுகாப்பதற்காகத் தமது உயிர்களைத் துச்சமென மதித்துப் போராடிய திரம் நிறைந்த வீரர்களில் ஈரோஸ் இயக்க அங்கத்தவர்களும் அடங்குவர்.

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்ட போதிலும், மலையகத்திலும், வடக்கிலும், கிழக்கிலும், விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் பூரண விடுதலை கிடைக்கும்வரை தமது போராட்டம் தொடரும் என்று ஈரோஸ் அறிவித்திருக்கிறது.

ஆயுதங்களை மட்டும் நம்பித் தாம் போராட்டத்தை நடத்தவில்லை என்றும்; மக்களை நம்பியே தமது போராட்டம் அமைந்திருந்தது என்றும் ஈரோஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் செயற்பாடுகளுக்கு உந்து சக்தியாக இருக்கும் வகையிலேயே, தங்கள் இராணுவ நடவடிக்கை - ஆயுதப் போராட்டம் அமைந்திருந்ததாக ஈரோஸின் பொது ஆணைக்குழு விளக்கி உள்ளது.

அதாவது, போராட்டத்துக்கு முழுக்க முழுக்க ஆயுதங்களை நம்பியிருக்கவில்லை. ஆயுதங்கள் இல்லாமலும் போராட்டத்தைத் தொடர முடியும். ஆயுதங்கள் இல்லை என்பதற்காக போராட்டத்தை நிறுத்த வேண்டிய நிலைமை இல்லை என்பதை ஈரோஸ் இயக்கம் தெளிவுபடுத்தி இருக்கிறது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் வாழும் தமிழர்களுக்குப் பூரண விடுதலை - சுதந்திரம் கைகூடப்போவதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. தமிழர்கள் தங்கள் சுய நிர்ணய உரிமையை நிலைநிறுத்தி, பூரண ஆட்சி அதிகாரம் பெறுவதற்கு ஒப்பந்தம் வழிசெய்யப் போவதில்லை என்பதும் நிச்சயம்.

எனவே கையில் ஆயுதம் உண்டோ இல்லையோ தமிழர்களின் போராட்டம் தொடரும் என்பதை அரசியல் நிபுணர்கள் இலகுவில் உணர்ந்து கொள்வர்.

ஆயுதங்கள் பறிபோனதால் சுதந்திரப் போராட்டம் முற்றுப் பெற்றுவிட்டதாகக் கருத முடியாது. இடைக்காலத் தீர்வு ஒன்று வருவதால் இலட்சியம் நிறைவேறிவிட்டதாகவும் கொள்ளல் ஆகாது.

ஆயுதம் ஏந்திப் போராடுவது மட்டும் தானா போராட்டம்? மக்கள் மனவலிமையுடன் திரண்டு ஒரே சக்தியாகப் போராடினால் என்றோ ஒரு நாள் மக்கள் தமது இலட்சியத்தை அடைய வழி பிறக்கும்.

அரசியல் போராட்டம் மட்டும்தான் பெரும் போராட்டம் என்பதல்ல. மக்களை அரசியல் மயப்படுத்தவும் போராட்டம் தேவை. தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் நூற்றுக்குப் பத்து வீதத்தினராவது அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கிறார்களா என்பது சந்தேகமே.

ஆழமான அரசியல் அறிவும், அதனைப் பிரயோகிக்கும் தன்மையும் எமது மக்களிடையே பூச்சியம் என்று கூடச் சொல்லலாம். மேலெழுந்தவாரியான, மேலோட்டமான அரசியல் பேச்சுக்களும், முச்சந்திக் கலந்துரையாடல்களுமே இங்கு அரசியல் அறிவூட்டகங்களாக அமைகின்றன. சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கு அந்த மட்டத்தில் நின்று மக்களை அரசியல் மயப்படுத்த முடியும் என எதிர்பார்ப்பது புத்திசாலித்தனமன்று.

விடுதலைக்கான போராட்டத்தைத் தொடர்வதற்கு மக்களை அரசியல் மயப்படுத்த வேண்டிய தேவை முன்னிற்கிறது. அரசியல் மயப்படுத்துவது என்பது மக்களை "Brain Wash" செய்வது என்பது அல்ல. விடுதலையின் அவசியம், அதனைக் காண்பதற்குச் செய்யவேண்டிய தியாகங்கள், துறக்கவேண்டிய சுகபோகங்கள், சுதேசியத்தின் அவசியத்தை உணர்தல். சமுதாய சமத்துவத்தைப் பேணுவதன் அவசியம், தற்காலிக மாயைகளில் மோகம் கொள்ளாதிருத்தல் ஆகிய இன்னோரன்ன குணாம்சங்களை மக்கள் மத்தியில் வளர்த்தலையே அரசியல்மயப்படுத்துதல் எனக் கூறுகிறோம்.

தங்கள் நாடு, தங்கள் மொழி, தங்கள் இனம் என்பவற்றைப் பேணிக் காக்க வேண்டும் என்ற உணர்வை மக்கள்பெற்று விட்டால், சுதந்திரத்தை அடைவது கஷ்டமாகிவிடாது, ஆயுதம்தான் தேவை என்றும் ஆகாது.

ஆயுதம் இல்லாமலும் போராட்டத்தைத் தொடரப்போவதாக அறிவித்திருக்கும் ஈரோஸ் இயக்கம் தமிழ் மக்களை அரசியல் மயப்படுத்தும் போராட்டத்தையும் நடத்துமோ என்னவோ?

## எம். ஜி. ஆர். வந்த பின்பே தீர்மானங்கள்

சென்னை, ஆக. 16

முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அமெரிக்காவில் இருந்து திரும்பும் வரை தமிழ்நாடு அமைச்சரவை முக்கிய கொள்கை தீர்மானங்கள் எதையும் மேற்கொள்ளாது.

இப்படி தமிழக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அதனிடையில் முதலமைச்சரின் அமைச்சுக்கள் ஆற்றும் பணிகளை நிதி அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தற்காலிகமாகப் பார்த்துக் கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது.

(இ-எ)

### கடல் கண்ணி கண்டு பிடிப்பை அடுத்து

# கப்பல் போக்குவரத்து நடத்தத் தடை!

## ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நடவடிக்கை

டுபாய், ஆக. 16

ஐக்கிய அரபு எமிரேட்ஸை ஒட்டிஉள்ள பத்து மைல் கடல்பிராந்தியத்தில் கப்பற் போக்குவரத்து நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இப்பிராந்தியத்தில் கப்பல் ஒன்று கடல்கண்ணியில் சிக்கி கடந்தவெள்ளி மூழ்கியது.

இப்பிராந்தியத்தில் கடல்கண்ணிகள்போடப் பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்தே இத்தடையை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் விதித்துஉள்ளது.

### வெளி உலகில்

இதனிடையில் தனது வாராந்திர ஒளிபரப்பு நிலையப் பேச்சில் அமெரிக்க அதிபர் றேகன், "வளைகுடாவில் அமெரிக்காவுக்கு உள்ள நலன் எக்கட்டத்திலும் விட்டுக் கொடுக்கப்படமாட்டாது"-என்று மீண்டும் உறுதி கூறியிருக்கின்றார்.

தனது நட்புநாடுகள் பயமுறுத்தலுக்குள்ளாவதை அமெரிக்கா பார்த்துக் கொண்டிருக்க மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

### குழந்தைகளுக்கு

# 6 நோய்களுக்கு எதிராகத் தடுப்பு ஊசி

ஜெனிவா, ஆக 16

உலகில் உள்ள குழந்தைகளில் அரைப் பங்கினர் 6 நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போடுகின்றனர்.

இப்படி உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்து உள்ளது,

தொண்டைக்கரப்பன், கக்குவான், சயரோகம், ஏற்பு, இளம்பிள்ளைவாதம், அம்மை ஆகியவையே இந்த ஆறு நோய்களும் ஆகும்.

1990ஆம் ஆண்டுக்கு இடையில் உலகின் சகல குழந்தைகளுக்கும் தடுப்பு மருந்துகள் கொடுக்கப்பட்டாகவேண்டும் என்ற இயக்கத்தை உலக சுகாதார ஸ்தாபனம் நடத்தி வருகின்றது.

(இ-எ)

## உண்ணாவிரதம்

கெய்ரோ, ஆக. 16

கெய்ரோவில் உள்ள இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் ஆபிரிக்க மாணவர் உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

பல்கலைக்கழக நிர்வாகம் போதுமான வசதிகள், பாதுகாப்புத்தரத் தவறிவிட்டன என்று கூறியே இவர்கள் உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்துள்ளனர்.

(உ-எ)

# தேர்தலுக்கு முன்னரேயே இந்திய துருப்புக்கள் சென்றுவிடும்

## ஜே. ஆர். கூறுகிறார்

லண்டன் டைம்ஸ், நியூயார்க் டைம்ஸ் பத்திரிகைகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்த பேட்டியின் மூன்றாவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கேள்வி: எல்லா ஆயுதங்களும் ஒப்படைக்கப் பட்டு விட்டன என்பதை நீங்கள் எப்படி அறிந்து கொள்வீர்கள்?

ஜே. ஆர்: அவர்களிடம் எவ்வளவு ஆயுதங்கள் உள்ளன என்பது எமக்குத் தெரியும். எண்ணிக்கை எமக்குத் தெரியும்.

கேள்வி: அவ்வளவு ஆயுதங்களும் ஒப்படைக்கப்படாவிட்டால், இந்திய இராணுவம் அவற்றைத் தேடும் பணியில் ஈடுபடுமா?

ஜே. ஆர்: ஆம். சாதாரணமாக அவர்கள் தேடுவார்கள்.

கேள்வி: எவ்வளவு காலம் அவர்களுக்குக் கொடுப்பீர்கள்?

ஜே. ஆர்: நாம் அது பற்றித் தீர்மானிக்கவில்லை. அதுவரை நாம் ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடோம்.

கேள்வி: ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டு நிலைமை அமைதியானவுடன் இந்தியத் துருப்புக்கள் சென்று விடுமா?

ஜே. ஆர்: அதைநான்தான் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வி: காலவரையறை என்ன?

ஜே. ஆர்: என்னிடம் கால அட்டவணைஇல்லை.

கேள்வி: ஒரு சில வாரங்கள்...?

ஜே ஆர்: வடக்கு கிழக்கில் அவசரகாலச் சட்டம் ஆகஸ்ட் 15 இல் நீக்கப்படும் அத்திகதி பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கின்றோம். அது நீடிக்கப்படலாம்.

கேள்வி: இந்தியத் துருப்புக்கள் செல்ல வேண்டும் என்று உங்கள் மனதிலுள்ள காலக்கெடு அதுதானா?

ஜே ஆர்: அதில் இருந்து சில தினங்கள் கழித்து.

கேள்வி: ஆகஸ்ட் 15க்கும் 20க்கும் இடையில் இந்தியத் துருப்புக்கள் போக வேண்டும் என்று விரும்புகின்றீர்களா?

ஜே. ஆர்: ஆம்.

கேள்வி: நீங்கள் சொல்லும் போது அவர்கள் போவார்கள்.

ஜே. ஆர்: உண்மையாகச் சிந்தனையின் அடிப்படையில் தான் நான் பேசுவேன்.

கேள்வி: சிலவேளை இது தேர்தல் வரை இடம் பெறலாம். அப்போது தேர்தலை மேற்பார்வையிட இந்தியத் துருப்புக்கள் இங்கு இருப்பார்களா?

ஜே ஆர்: இல்லை. தேர்தலின் போது இந்தியத் துருப்புக்கள் இங்கு இருக்கா.

கேள்வி: தேர்தலுக்கு முன்னர் இந்தியத் துருப்புக்கள் போய் விடுவார்கள் என்று நிச்சயமாக அடித்துக் கூறுவீர்களா?

ஜே ஆர்: அதற்கு எவ்வளவு காலத்துக்கு முன்னரேயே போய்விடுவார்கள்.

(வளரும்)

### கல்முனையில் புலிகள் பணியகம்:

# தேரர் புலிக்கொடி ஏற்றினார்; முஸ்லிம் வர்த்தகர் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்

கல்முனை, ஆக 17

கல்முனையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியகம் ஆயிரக்கணக்கான மக்கள் சூழ்ந்திருக்க புலிக்கொடி ஏற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

கல்முனைப் பிரதேச தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர் திரு. ரமணன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பொது மக்கள் வியக்கும் வண்ணம் பணியக வாயிலில், கல்முனை பௌத்த விகாரை பௌத்த குரு வணக்கத்துக்குரிய ஜி. சோமரத்தின தேரர் புலிக் கொடியை ஏற்றி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, சங்கைக்குரிய சகோதரர் எஸ். ஏ. ஐ. மத்தியூ, (கல்முனை கார்மெல் பாத்திமாக் கல்லூரி அதிபர்), டாக்டர் இரா. சிவஅன்பு, வண. சதாசிவம் குருக்கள் ஆகியோர் மங்கல விளக்கேற்றி வைத்தனர்.

கல்முனை பட்டினசபையின் முன்னாள் தலைவரும், பிரபல வர்த்தகருமான ஹாஜியார் கே. கே. மரைக்கார் நாடாவை வெட்டி பணியகத்தைத் திறந்து வைத்தார்.

பிரதம விருந்தினரான வண. ஜி. சோமரத்தின தேரர் சிங்களத்தில் உரையாற்றினார்.

இவரின் உரையை மாத்தறை எம். ஏ. சி. முகமட் மொழி பெயர்த்தார்.

தேரர் பேசுகையில்:- கடந்த நான்கு வருடங்களாக இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்ற பேதமிருந்து வந்தது. ஆனால் அவை தற்போது நீங்கி மக்களிடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இங்கு ஏற்பட்ட இழப்புக்களுக்கு ஆயுதங்களே காரணம். இந்த ஆயுதங்களை அமெரிக்காவும், ரஷ்யாவும் விற்று இலாபமீட்டின. நாம் நஷ்டமடைந்தோம். இதனால் 6000 பேர் பலியாகினர்.

1971 ஆம் ஆண்டு கூட ஜே. வி. பி. இளைஞர்கள் 15 ஆயிரம் பேர் இறந்தனர்.

இப்படியான செயல்களால் ஒரு சிலரே நன்மை அடைந்தனர்.

இங்கு அமைக்கப்பட்டுள்ள பணியகம் சகல இன மக்களும் பாதிக்கப்படாத முறையில் பலனுடைய உதவியாக இருக்கவேண்டும்.

24 மணி நேரமும் எனது இருப்பிடக் கதவுகளும் சமாதானத்துக்காக வருபவர்களுக்குத் திறந்திருக்கும்.

இப்படி தேரர் கூறினார்.

பெருந்திரளான முஸ்லிம் பிரமுகர்கள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்களின் நிலைப்பாடு பற்றிப் புலிகள் பொறுப்பாளர் திரு. ரமணன் உரையாற்றினார்.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை வீதியால் வந்த இந்திய இராணுவ வண்டிக்கு [illegible] வீரர்களுக்குக் கைகொடு

(4-ம் பக்கம் பார்க்க)

### சமய சந்நிதிகளில்

## நயினையில் திருவிளக்குப் பூசை

யாழ்ப்பாணம், ஆக 17

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயிலில் கடந்த 9 ஆம் திகதி பௌர்ணமி தினத்தன்று திருவிளக்குப் பூசை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இனிவரும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் திருவிளக்குப் பூசை நடைபெறும்.

அன்று விஷேடமாக அம்மன் உள் வீதியுலா வருவார். (இ-ஒ)



### பொய்யாமொழி

**குறள்:**

உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந்து எண்ணிக் கொளல்.

**பொருள்:**

தன்னிடமிருந்து பிரிந்து சென்று ஒரு காரணம் பற்றித் திரும்பி வந்தவனை, அரசன் அவன் நாடிய உதவியைச் செய்து ஆராய்ந்து உறவு கொள்ள வேண்டும்.

# கண்ணி வெடிகள் இல்லை என்பதை இந்திய இராணுவம் உறுதிப்படுத்த வேண்டும்

## கோட்டக் கல்வி அதிகாரி கூறுகிறார்

வடமராட்சி, ஆக 17

வடமராட்சிபாடசாலைகளில் உள்ள கண்ணி வெடிகளை அகற்றி, அங்கு கண்ணிவெடிகள் இல்லை என இந்திய இராணுவம் உறுதிப்படுத்தும்பட்சத்தில் மீண்டும் பழைய இடங்களிலேயே பாடசாலைகள் இயங்கும்.

உதயன் செய்தியாளரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்தபோது கோட்டக்கல்வி அதிகாரி செல்வி ரி. பெரியதம்பி இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலைகள் மீண்டும் இயங்குவதற்குக் கண்ணிவெடிகளே முட்டுக்கட்டையாக உள்ளன.

இராணுவம் முகாமிட்டிருந்த பாடசாலைகளிலும் கண்ணிவெடிகள் உள்ளன.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தற்காலிகமாக இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலையில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும், மாலையில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையும் இயங்கவுள்ளன.

இந்தப் பகுதியில் சேதமடைந்த பாடசாலைகளை முற்றாக இடித்து புதுக் கட்டடங்களையே கட்ட வேண்டியுள்ளது.

பாடசாலைகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே இதற்குச் செலவிடவேண்டும்.

இவ்வாறு அவர்மேலும் தெரிவித்தார்.

(இ-7-160)

# சுகாதார குடும்ப நல சேவையாளர் திரட்டப்படுவர்

யாழ்ப்பாணம், ஆக 17

சுகாதார குடும்பநல சேவையாளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட உள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை சுகாதாரசேவைகள் திணைக்களம் கோரி இருக்கிறது.

தொண்டர் சேவையில் ஒருவருடம் பூர்த்தி செய்வோர் இப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்குதமது விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஜீ. சி. ஈ. சாதாரணதர கல்வித்தகைமை உடைய திருமண மாகாதோர் இதற்கு விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள்.

(இ)

# வீட்டு, உடை வசதிகளை நோர்வே செஞ்சிலுவைச்சங்கம்

## பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கும்

யாழ்ப்பாணம், ஆக. 17

மிகவும் பாதிப்படைந்த, பின்தங்கிய மக்களுக்கு உடனடியாக வீட்டுவசதி, உடைவசதி என்பனவற்றை செய்து கொடுக்க நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

நோர்வே செஞ்சிலுவைச் சங்கச்செயலாளர் நாயகம் திரு ஒட் இராண்ட் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

வீட்டுவசதியில் வடமராட்சி, மாவிட்டபுரம் பகுதிகளில் பாதிப்படைந்தவர்களுக்கே முதலிடம் வழங்கப்படும்.

யாழ்வந்திருந்த நோர்வே செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகளிடம் இராணுவக் கெடுபிடிகளினால் பல துறைகளிலும் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய விவரங்களையும்—

இவர்களுக்குத் தேவையான உணவு, உடை, இருப்பிட, சுகாதார வசதிகள் அடங்கிய அறிக்கை ஒன்றையும் யாழ் செஞ்சிலுவைச் சங்கம் கையளித்தது.

தாம் நேரில் கண்டதையும் இந்த அறிக்கையையும், ஜெனீவா செஞ்சிலுவைச் சங்க கூட்டுக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றின் முன் சமர்ப்பிப்பதாக நோர்வே செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் உறுதியளித்ததுடன் மேற்கூறிய வசதிகளையும் ஏற்படுத்தித் தருவதாக உறுதி அளித்துள்ளனர். (இ-7)

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## முருகா! கணமேனும் வந்தால் என்ன?

ராகம்: சாரங்கா — தாளம்: ஆதி

பல்லவி

கணமேனும் மறவாதுன் கழல்கள் நினைக்குமென்முன்
கணமேனும் வந்தால் என்ன?— முருகா [கண...]

அனுபல்லவி

கந்தா கடம்பா கதிர்வேல் குமரையா!
வந்தாள் தந்தாள் உன்தாள் என்றுன்னைக் [கண...]

சரணம்

உன்புகழ் பாடுமென் கண்ணீர் பெருகுதையா!
உன்னருள் கேட்டுஎன் உள்ளம் மயங்குதையா!!
உன்திறம் கேட்குமென் நெஞ்சம் உவக்குதையா!
உன்னெழில் காணஎன் உள்ளம் தவிக்குதையா!! [கண...]

"முருகு"

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பீடாபாக்கு, சொப்பரு, தாம்பூல கேசரி, கஸ்தூரிமஞ்சள், இந்தியன் பட்டுத் துண்டுகள், சிங்கப்பூர் குங்கிலியம், தாய்லான் குங்குலியம், சுத்தமான தேன், நெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இல. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.



# உதயன்

17 08 1987 திங்கட்கிழமை



பீடாபாக்கு, கொப்பரு, தாம்பூல கேசரி, கஸ்தூரிமஞ்சள், இந்தியன் பட்டுத் துண்டுகள் சிங்கப்பூர் குங்கிலியம், தாய்லான் குங்குலியம், சுத்தமான தேன், நெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், வேப்பெண்ணெய், ஆமணக்கெண்ணெய் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
(மருந்துச்சரக்கு வியாபாரம்)
இ. 4, பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.


# அவசரகாலச் சட்டம் நீக்கம்; இடைக்கால நிர்வாக அமைப்பு

## தாமதமாகும்

கொழும்பு, ஆக. 17

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவதும் இடைக்கால நிர்வாகத்தை அமைப்பதும் தாமதமாகும்.

போராளிக் குழுக்கள் ஆயுதங்களை ஒப்படைப்பதில் அவ்வளவு முன்னேற்றம் காணப்படாததே இத்தாமதத்திற்குக் காரணம் என்று அரசு உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்படி வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இம்மாதம் பதினைந்தாம் திகதியுடன் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், நீக்கப்படவில்லை.

வன்செயல் நிறுத்தப்பட்ட அடுத்த 72 மணித்தியாலங்களுக்குள் பாசறைக்குள் இராணுவம் வைக்கப்பட வேண்டும்; போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கவேண்டும்— இப்படி ஒப்பந்தத்தில் கூறப்பட்டு இருந்தது.

ஆனால் அரசு ஆயுதங்கள் ஒப்படைப்பதற்கான காலக் கெடுவை மூன்று தினங்களால் நீடித்தது.

''அரசு எதிர்பார்த்தபடி ஆயுத ஒப்படைப்பு இடம்பெறவில்லை. அதனால் அவசரகாலச் சட்டம் நீக்கப்படுவதும் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படுவதும் தாமதமாகின்றது''— இப்படி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கை, இராணுவ வட்டாரங்களின்படி பத்து சதவீத ஆயுதங்களே ஒப்படைக்கப்பட்டுள்ளனவாம். (இ-எ)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 17

''இலங்கை — இந்திய ஒப்பந்தமும் தமிழ்பேசும் மக்களின் எதிர்காலமும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஜனப். எம். வை. சித்தீக் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி, விரிவுரையாளர் திரு. எம். திருநாவுக்கரசு, யாழ் சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா மைக்கல் ஜோசப், யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. கி. பாலசுப்பிரமணியம், முன்னாள் யாழ் மேயர் திரு இராசா விசுவநாதன் ஆகியோரும், பல பத்திரிகையாளர்களும் இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.

யாழ் பல்கலைக்கழக வணிக மன்றம் இந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கிறது. (உ)

## ஹைதராபாத்தில் இறுதிச் சடங்கு

ஹைதராபாத், ஆக. 16

யாழ் கண்ணி வெடி விபத்தில் உயிரிழந்த இரண்டு இந்தியப் படை வீரர்களின் இறுதிச்சடங்குகள் ஹைதராபாத்தில் வியாழனன்று முழு இராணுவமரியாதைகளுடன் இடம்பெற்றன. (உ-எ)

## தேரர் புலிக்---

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

த்து ஆரவாரித்தனர்.

பாண்டிருப்பு தாழவெட்டுவான் சந்தியில் தமிழ் வர்த்தகர்களால் மறிக்கப்பட்ட வாகனங்களில் இருந்த இந்திய இராணுவ வீரர்களுக்கு இனிப்பு, சோடா, சிகரெட் வகைகள் வழங்கப் பட்டன.

அங்கு கூடியிருந்த பொதுமக்கள் வீரர்களிடம் பெயரைக் கேட்டு இந்திய இராணுவம் வாழ்கவென கத்தி கரகோஷம் செய்தனர்.

இந்திய இராணுவத்தினர் நாம் தினமும் இங்கு வருவோம் எனக் கூறிய போது பட்டாசுகள் வெடித்தன. (இ-84)

## மோதலை..

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

இலங்கை வரமாட்டார். சமாதான ஒப்பந்தம் தொடர்பான முக்கிய விஷயங்கள் பற்றி முடிவு செய்யும் முகமாக தமிழ் நாடு அரசுடனும் புதுடில்லி அரசுடனும் தொடர்பு கொண்டிருக்கின்றார்,

கேள்வி, அரசுத்தலைவர்களை சந்திப்பீர்களா?

சிவா: சந்திக்கும் எண்ணம் இடையாது இது உத்தியோகப் பற்றற்ற விஜயம் (இ-எ)

## ஆரம்பவகுப்பு ஆசிரியர் தெரிவுப் பரீட்சை 23 இல்

யாழ்ப்பாணம், ஆக. 17

ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களைத் தெரிவு செய்தற்கான பரீட்சை எதிர் வரும் 23 ஆம் திகதி யாழ் மாவட்டத்தில் 35 பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

இப்பரீட்சைக்கு யாழ் மாவட்டத்திலிருந்து தோற்றும் பரீட்சார்த்திகளுடைய பிரவேசப் பத்திரங்கள் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பின்வருவோரின் 14 பிரவேசப் பத்திரங்கள் தபால் விலாசம் கொடுபடாத காரணத்தினால் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவில்லை.

அவற்றை உரிய பரீட்சார்த்திகள் யாழ் கல்வித் திணைக்களத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு கோரப் படுகின்றனர்.

14 பேரும் வருமாறு:

1. ஆர். சியாமளா, 2. பி. சோயிலா, 3. எம். திவ்விமிகோசனி, 4. எஸ் மகாலக்குமி, 5. பி. ஜெயவர்த்தினி, 6. எஸ் சத்தியதேவி, 7. எம் சிவரஞ்சனி, 8. என். ஜெயமலர், 9. ஆர். இராசகுலோசனா, 10. எ அருணம்பிகை, 11. சந்திரசேகரம் சாந்தகுமார், 12. எஸ். மோகனதாஸ், 13. எ. இரவீந்திரன், 14. எம். சிவரத்தினம்

நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலையில் இருந்த பரீட்சை நிலையம் கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டப இலக்கம் நான்கிற்கு மாற்றப்பட்டுள்ளது (இ)

## செல்வச்சந்நிதி ஆலயத்துக்கு ரூ. 35 லட்சம்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தைபுனர் நிர்மாணம் செய்ய 35 லட்சம் ரூபா நிதி உதவி வழங்கப்படும் என்று அரசு உறுதியளித்துள்ளது.

ஆலயம் நேற்று நிர்வாகிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-எ)

## இல-இந்திய---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சந்தித்தனர்.

அதிகாரப் பரவலாக்கல் பற்றிய இரண்டு அரசாங்கங்கள் நடத்தும் பேச்சுக்கள் ஒரு வாரம் வரை நீடிக்கும் என்று தெரிகின்றது.

பேச்சுக்கள் உத்தேச மாகாண சபைச் சட்ட மூலத்தைத் தயாரிப்பதுடன் முடிவடையும் என்று நம்பப்படுகின்றது. (உ-எ)

## ஒப்பந்தத்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ ரீதியிலான போராட்டத்தைத்தான் வளர்ச்சியாகக் கருதினார்கள்

முகாம்களை அழித்தொழித்து இராணுவம் வெளியால் வருவதை மட்டும் தடுத்து நிறுத்தினால் போராட்டம் வெற்றி பெறும் என்று நினைத்தால் அது தவறாகும்.

எனவே சமூக மாற்றம் ஒன்றை ஏற்படுத்தக் கூடிய திட்டம் ஒன்றை வகுத்து அதன் வழியே அரசியல் போராட்டத்தை தொடர்வதுதான் ஈரோஸின் வழிமுறையாகும்.

ஏனைய இயக்கங்கள் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் சமூக திட்டங்களுக்கு ஏற்ப தமது திட்டங்களை வகுத்துச் செயல்பட்டதால்தான் அவை ஒன்றுடன் ஒன்று போட்டி போட நிர்ப்பந்திக்கப் பட்டன.

இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக்கொள்பவர்கள் மீது பெரும்பான்மை பிரயோகிப்பதை ஈரோஸ் என்றும் ஏற்றுக்கொள்ளாது.

இனி வரும் தேர்தலில் வெற்றி அளித்து அதனை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் ஈரோஸ் மக்களின் முடிவுக்கு மதிப்பளிக்கும் என்றும் நேசன் தெரிவித்தார். (இ)

## ஜே. வி. பியிடம் 2000 துப்பாக்கிகள்

கொழும்பு, ஆக 17

தென் இலங்கையில் தடைசெய்யப்பட்ட ஜே. வி. பி உறுப்பினர்களிடம் சுமார் இரண்டாயிரம் துப்பாக்கிகள் மற்றும் ஆயுதங்கள் இருக்கின்றன என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பில் பொலீஸ் வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

இதனிடையில் ஜே. வி. பி யின் தலைவர் ரோஹன விஜயவீர அல்லர் என்றும் அவர் இயக்கத்தின் நடுத்தரத் தலைவர்களில் ஒருவரே என்றும் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜே வி பியின் உயர் பீடத்தில் பேராசிரியர்களும் அரசியல் வாதிகளும் அங்கம் வகிக்கின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (இ எ)

## தேவைகளை அறிவியுங்கள்

யாழ்ப்பாணம், ஆக 17

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல செஞ்சிலுவைச் சங்க கிளைகள் ஊடாக சகல மக்களுக்கும் உதவிபுரிவதற்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கம் உறுதி அளித்துள்ளது

எனவே இரு மாவட்டங்களில் உள்ள செஞ்சிலுவைச் சங்க கிளைத் தலைவர்கள் தமதுதேவைகளை எதிர்வரும் புதன் கிழமைக்கு முன்னர் கொழும்பில் உள்ள நொருட் நிறுவன முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ் பிரசைகள் குழுக்கள் இணைப்புக் குழுப் பேச்சாளர் திரு எஸ். சிவானந்தராசா இத்தகவலைத் தெரிவித்தார்.

''நோருட் நிறுவனம்,' மே.பா. செஞ்சிலுவைச் சங்க அதிகாரி 34, வோட் பிளேஸ், கொழும்பு 7) என்ற முகவரிக்கு தமது தேவைகளை அனுப்புமாறு வேண்டப்பட்டிருக்கிறது. (உ-10)

## செஞ்சிலுவைச் சங்க கருத்துவேறுபாடு நீக்கம்

யாழ்ப்பாணம், ஆக 17

கொழும்பிலிருந்து வந்த ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் கொழும்பு திரும்பினர்

இனிமேல் செஞ்சிலுவைச்சங்கத்தின் யாழ் பிரிவுப் பிரதிநிதிகளே ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளை இங்கு கவனிப்பர். ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும். யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நிலவிய கருத்துவேறுபாடுகள் நீக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா, யாழ் செஞ்சிலுவைச் சங்கங்கள் எனத் தனித்தனியாக இயங்காமல்யாழ்ப்பாண செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் இனிமேல் ஸ்ரீலங்காசெஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதிகளாக இங்கு இயங்குவர். (உ-10)

### குடாநாட்டு மக்களுக்கு வழங்க

## 4ஆயிரம்தொன்உணவு இன்னும் தேவை!

யாழ்ப்பாணம், ஆக 17

யாழ் குடாநாட்டு மக்களுக்கு உடனடி நிவாரணமாக வழங்குவதற்கு இன்னும் நாலாயிரம் தொன் உணவுப்பொருள்கள் தேவைப்படுகின்றன.

அவற்றை அனுப்பி வைப்பதற்கு இந்தியா உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

—இவ்வாறு கோரும் கடிதம் ஒன்றை இந்தியச் செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர்.

இதுவரை நாலாயிரம் தொன் உணவுப் பொருள்கள் மட்டுமே யாழ்ப்பாணம் வந்ததாகவும்— அவை பொதுமக்களுக்கு ஏற்கனவே விநியோகித்து முடிந்து விட்டதாகவும் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

## இந்திய இராணு....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றது.

நிலைப்பாட்டில் பெரிய மாற்றம் ஒன்று ஏற்படும் போது பிரச்சினைகள் தோன்றத்தான் செய்யும்.

ஒப்பந்தம் அமுல்செய்யப்படுவதில் முன்னேற்றம் காணப்படுகின்றது என்று சொன்னால், ஒப்பந்தத்தில் கூறப்பட்ட படி எல்லாம் சரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. பிரச்சினைகள் வரும்; அதை நாம் தீர்த்து முன்னேற வேண்டும்

இந்த ஒப்பந்தம் நின்று பிடிக்கும்; சரியாக அமுல் நடத்தப்படும் என்பதில் எனக்கு நல்ல நம்பிக்கை உண்டு.

வடக்கு, கிழக்கு மகாணங்களில் அமைதியை இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தும். அங்கு வாழும் தமிழ் மக்கள் பூரண சுதந்திரம் உள்ள பிரசைகளாக வாழவும் இந்த ஒப்பந்தம் வழி செய்யும்.

பி. பி. சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்:

பிரதமர் அவர்களே! இலங்கையில் இருந்து உங்கள் இராணுவம் இலகுவில் விலக்கிக்கொள்ளப்படுமா?

பிரதமர் ராஜீவ்காந்தி ஆம். விலக்கிக்கொள்ளப்படும் என்று நான் நினைக்கிறேன்.

ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்ட பின்னர்—சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கைஉணர்வு தோன்றிய பின்னர்— இலங்கை அரசுடன், பிரசைகளும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும்கோருமிடத்து நாம் எமது இராணுவத்தை இலங்கையில் இருந்து திருப்பி அழைப்போம்

இப்படிப் பிரதமர் காந்தி சொன்னார். (இ-எ)

## தடை அகற்றப்பட்டது

யாழ்-முனீஸ்வரன் வீதிக்கு குறுக்காக போடப்பட்டிருந்தவீதித் தடை நேற்று அகற்றப் பட்டது.

கோட்டையில் இருந்து இராணுவம் நடத்தும் தாக்குதல்களை தடுக்கு முகமாகவும், கோட்டை இராணுவத்தினர் வெளியேறுவதை தடுக்குமுகமாகவும் விடுதலைப் புலிகளினால் இந்த வீதித் தடை போடப்பட்டது.

தற்போது நிலைமை வழமைக்குத் திரும்பியதையடுத்து தடை அகற்றப்பட்டு விட்டதாயினும் பொதுமக்கள் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது (உ-10)

## அடகு நகை--

(1ம்-பக்கத் தொடர்ச்சி)

அடுத்த இரண்டு வாரங்களுக்கு இடையில் மக்கள்வங்கி எடுக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது (இ எ)

### சைப்பிரஸைப் போன்று இங்கும்

## ஈழம் உருவாவதைவிட இது மேல் அல்லவா?

### டிரோன் கேட்கின்றார்

கொழும்பு, ஆக 17

சைப்பிரஸைப் போன்று ஈழம் உருவாகி இந்திய இராணுவம் வருவதைப் பார்க்கிலும், எமது விருப்புடன் இந்திய இராணுவம் வந்து தீவிரவாதிகளிடம் இருந்து ஆயுதங்களைக் கீழே போடச் செய்வது மேல் அல்லவா!

பிரதி வெளிநாட்டமைச்சர் திரு. டிரோன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு சொன்னார்.

கடந்த 10 ஆண்டுகளில் இலங்கை அரசின் வெளியுறவுக் கொள்கை என்ற தலைப்பில் கொழும்பு சமய சமூக நிலையத்தில் நடந்த கருத்தரங்கில் பிரதி அமைச்சர் பேசினார். அப்போதே மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

பிரதி அமைச்சர் மேலும் சொன்னதாவது;

பிரதமர் பிரேமதாசாவுக்கு அடுத்ததாக இந்தியா மீது கண்டனம் தெரிவித்தவன் நான்தான்.

இந்த நிலையில் இந்தியாவுடன் நாம் செய்து கொண்ட ஒப்பந்தத்தை சாதாரண மக்கள் எதிர்க்கின்றனர். ஒன்றரைக் கோடி மக்களைக் கொண்ட எமது நாடு 80 கோடி மக்களைக் கொண்ட நாட்டுடன் மோத முடியுமா?

அமெரிக்காவுக்குத் தளம் கொடுத்திருக்கலாமே! இந்தியாவுக்கு ஏன் சேவகம் புரியவேண்டும்? — இப்படி எல்லாம் சிலர் பேசுகின்றனர்.

அமெரிக்காவுக்குத் தளம் கொடுத்தால் அவர்களுக்கும் நாம் சேவகம் செய்ய வேண்டி வரும் என்பதை இப்படிக் கூறுபவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவுக்கு எதிராக அமெரிக்கா எதுவும் செய்யாது.

—இப்படி பிரதி அமைச்சர் சொன்னார். (உ-எ)

## கூட்டணியினர் எப்போது நாடு திரும்புவர்

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைவர்கள் இப்போதைக்கு நிரந்தரமாகத் தாயகம் திரும்பமாட்டார்கள்.

ஒப்பந்தத்தில் கூறப்பட்ட படி மாகாண சபைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுச் சட்டமாக்கப்பட்ட பின்னரே, கூட்டணித் தலைவர்கள் நிரந்தரமாக நாடு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கபபடுகிறது. (இ-எ)

## யாழ் பொலிஸ் நிலையம் 21இல்

கொழும்பு, ஆக 17

யாழ் பொலிஸ் நிலையம் இம்மாதம் 21ஆம் திகதி மீண்டும் செயல்படத் தொடங்கும். (இ-எ)

## பொலிஸார் காயம்

யாழ்ப்பாணம், ஆக 17

இந்திய இராணுவ டிறக்கும் ஸ்ரீலங்கா பொலிஸ் மோட்டார் சைக்கிளும் மோதின.

இதில் காயம் அடைந்த ஸ்ரீலங்கா பொலீஸ் கான்ஸ்டபிள் எஸ், நடராசா (வயது 35) யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார் (இ-160)

## உணவுவசதி இன்றி மடு யாத்திரிகர்

குருநகர், ஆக. 17

நாட்டில் ஏற்பட்டுள்ள அமைதி நிலையைப் பயன்படுத்தி இம்முறை பெருமளவில் மருதமடு ஆவணித்திருநாளுக்கு பக்தர்கள் சென்றனர். எனினும் போதிய உணவு வசதிகள் அங்கு இல்லாததால் பக்தர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது. (இ.51)

## தப்பிய சிலை

குருநகர், ஆக. 17

யாழ்நகரில் நிறுவப்பட்டிருந்த ஞாபகார்த்த சிலைகள்கூட இராணுவத் தாக்குதல்களுக்கு இலக்காகின. இருந்தாலும் ஒரேயொரு சிலை மட்டும் தப்பித்துக் கொண்டது.

யாழ்-பொதுசன நூலக வளவில் நிறுவப்பட்டிருக்கும் பாதர் லோங்கின் சிலை மட்டுமே தப்பித்துக் கொண்ட சிலையாகும். பாதர் லோங் யாழ் - புனித சம்பந்தரியார் கல்லூரி, பொதுசன நூலகம் ஆகியவற்றின் ஸ்தாபகர் என்பது குறிப்பிடத் தக்கது. (இ-51)


நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு உதயன் நடத்தும்
அதிர்ஷ்டப் பயணப் போட்டி

பெயர் ______
முகவரி ______

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?
உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?
சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 17-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2 Navalar Road, Jaffna on Monday August, 17 1987



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org